மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: **திரு.T. கோகுல கிருஷ்ணன் B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2022ம் வருடம் ஜூன் மாதம் 15ம் நாள் புதன்கிழமை
சுபகிருது ஆண்டு ஆனி மாதம் 01ம் நாள்

**CNR No. TNMD19-000332 -2015**

**I.A . No.349/2021**

**in**

**O.S. No. 43/2015**

1. K.P. அழகர்சாமி (இறப்பு)
2. கமலம்
3. செந்தில்குமார்
4. லோகநாதன்
5. புவனேஸ்வரி
6. கலாவதி

..... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. ராஜம்மாள் (இறப்பு)
2. வெங்கிடசாமி
3. V. கோவிந்தசாமி (இறப்பு)
4. ராணி
5. R. அமுதா
6. லதா

...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. சரோஜா
8. வத்சலா
9. பாபி
10. சுஜாதா

..... எதிர்மனுதாரர்கள்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனு **16.03.2021**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், வழக்கறிஞர் **திரு.A.R.சேதுபதி** அவர்கள் ஆஜராகியும், 2, 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், வழக்கறிஞர் **திரு.R.A.மோகன்ராம்** அவர்கள்

ஆஜராகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில், ஆஜரின்மை காரணமாக தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், கடந்த 13.06.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம ' மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி இறந்து விட்ட பின்னர், அவரது வாரிசுகளை சேர்க்காததால் 3ம் பிரதிவாதியைப்பொறுத்து அசல் வழக்கு அற்று போக செய்து வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி கட்டளை 22 விதி 9(2) மற்றும் சட்டப்பிரிவு 151, உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் படி மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள் என்றும், அசல் வழக்கானது, தாவா சொத்தினைப் பொறுத்து, 1ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவார்கள் என்றும், அசல் வழக்கும் நிலுவையில் இருந்த நிலையில், 3ம் பிரதிவாதி கடந்த 01.07.2016ம் தேதியில் இறந்து விட்ட நிலையில், 25.03.2019 வரை நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் கடந்த 21.06.2019ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் தொடர்பான விபரங்கள் ஏதும் குறிப்பிடாமல் குறிப்பாணை தாக்கல் செய்து, அதன்பிறகு 12.07.2019ம் தேதியில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் விபரங்கள் அளிக்கப்பட்ட பின்னர், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் தொடர்பான விபரங்களை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காலதாமதமாக கொடுத்ததால், உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யப்படாததால், இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கானது அற்று போய்விட்டதை ரத்து செய்திட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்களால் வாரிசு தொடர்பான காரணங்களை அளிக்கப்படாத காரணத்தினால் சட்டப்பூர்வ வாரிசுகளை உரிய காலத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் போய்விட்டதாலும், வழக்கானது அற்று போய் விட்டதாலும், இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு அற்று போய்விட்டதை ரத்து செய்திட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 2, 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர்மனு உரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், 28.08.2019ம் தேதியில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிற்கு கொடுக்கப்பட்ட அபிடவிட்டில், இறந்த 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றும், 3ம் பிரதிவாதி இறந்த 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்யாமல் இருந்துள்ளார்கள் என்றும், 29.09.2016ல் 3ம் பிரதிவாதி இறந்து விட்டதை, அடுத்த தெருவில் வசித்து வந்த மனுதாரர்கள்/வாதிகள், 3ம் பிரதிவாதி 29.09.2016ல் இறந்து விட்டார்

என்பதை நன்கு தெரிந்திருந்தும், உடனே மனுதாரர்கள்/வாதிகளால் 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு குறித்த காலவரையறைக்குள் மனு தாக்கல் செய்யாததற்கான காரணம் மனுதாரர்கள்/வாதிகளால் குறிப்பிடப்படாமல், தற்சமயம் 1000 நாட்கள் காலதாமதமாக எவ்வித உண்மையான விளக்கங்கள் எதுவுமில்லாமல் எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் மீது குறை கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு தரப்பினர்கள் இறந்து விட்டால், அவர்களது வாரிசுகளை சேர்ப்பதற்கான சட்ட நடவடிக்கையை வழக்கு தாக்கல் செய்த வாதியே குறிப்பிட்ட காலத்திற்குள் எடுக்க வேண்டும் என்றும், 3ம் பிரதிவாதி இறந்த தேதியை மனுதாரர்கள்/வாதிகளே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அதற்கான காலதாமத மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியை அற்று போக செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதற்கான மனுவானது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 07.12.2016 தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தாக்கல் செய்யாமல் 28.08.2019ம் தேதியில் 1000 நாட்கள் காலதாமதமாக, காலதாமத மனு ஏதுமில்லாமல் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த இந்த மனுவினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4) தீர்வு:**

(i) இருதரப்பு தரப்பு வழக்கறிஞரின் வாதுரை மற்றும் மனு அபிடவிட் ஆகியவை சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(ii) கட்டளை 22 விதி 9(2) உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவுடன் பிரிவு 5 காலவரையறைச்சட்டத்திற்குண்டான மனுவான இ.ம.எண். 622/2019 மனு தாக்கல் செய்யப்பட்டு, சமூகம் நீதிமன்றத்தால் முழு விசாரணைக்கு பின்னீடு கடந்த 16.03.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களை பார்வையிட்ட வகையில், இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

5) இ.ம.எண். 622/2019 அனுமதிக்கப்பட்டதின் தொடர்ச்சியான மனுவான இந்த மனு சமூகம் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

6) இறந்து போன 3ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வமான வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பாளராக சேர்த்துக்கொள்ள வேண்டியது மனுதாரர்கள்/வாதிகளின் கடமையாகும். அதன்படி, உரிமையியல் நடைமுறைச்சட்டத்திற்குட்பட்டு, மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு சமூகம் நீதிமன்றத்தால், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

7) இறந்து போன 3ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு சமூகம் நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டு, ஆஜராகாத காரணத்தினால் கடந்த 16.09.2021ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களை பார்வையிட்ட வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வருகின்றது.

8) மேலும், ஏற்கனவே சமூகம் நீதிமன்றத்தால் இ.ம.எண். 622/2019 மனு அனுமதிக்கப்பட்டுள்ளதாலும், அதன் தொடர்ச்சியான இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கானது தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளதாலும், அனைத்து தரப்பினர்களையும் கட்டுப்படுத்தி தீர்வு காண்பதே முடிவானதாகவும், இறுதியானதாகவும் இருக்கும் என்று இந்த நீதிமன்றத்தால் கருத முடிகிறது.

9) இருப்பினும், மனுதாரர்கள்/வாதிகளால், இந்த மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு இம்மனுவிற்காக ஏற்பட்ட செலவுதொகையாக ரூ.500/- எதிர்வரும் 28.06.2022ம் தேதிக்குள் செலுத்திட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக,

இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. இம்மனுவிற்கான செலவுதொகையான ரூ.500/-ஐ மனுதாரர்கள்/வாதிகள், 28.06.2022ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

அடுத்த விசாரணை நாள் 29.06.2022.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் :</u>** இல்லை

ஓம். T. கோகுலகிருஷ்ணன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி.